



# சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"






Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 348 | 10.06.2026 | WEDNESDAY | VAIKASI : 27 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 348 | 10.06.2026 | புதன்கிழமை | வைகாசி : 27 | விலை : ரூ.5/–


## த.வெ.க.வுக்கு ஆதரவு அளித்த அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் 21 பேர் மீது

# "தகுதி நீக்க நடவடிக்கை இல்லை"

## சபாநாயகர் ஜேசிடி பிரபாகர் அறிவிப்பு



■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ச.ஜோசப் விஜய் அவர்களை 8.6.2026 அன்று தலைமைச் செயலகத்தில், இந்திய தொழிற்சங்கங்களின் மத்திய அமைப்பின் (CITU) அகில இந்தியத் துணைத் தலைவர் திரு.ஏ. சௌந்தரராஜன், தமிழ்நாடு மாநிலத் தலைவர் திரு. ஜி. சுகுமாரன், பொதுச் செயலாளர் திரு. எஸ். கண்ணன், பொருளாளர் திரு. எஸ். ராஜேந்திரன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்துப் பேசினார்கள். உடன் மாண்புமிகு பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜுனா அவர்கள் உள்ளார்.

சென்னை, ஜூன்.10-

தமிழக சட்டசபையில் கடந்த மாதம் 13ந் தேதி நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் த.வெ.க. அரசு வெற்றி பெற்றது. ஆதரவாக 144 வாக்குகளும், எதிராக 22 வாக்குகளும் கிடைத்தன. 5 பேர் நடுநிலை வகித்தனர். தி.மு.க. வெளிநடப்பு செய்தது.

இதில், அ.தி.மு.க.வை சேர்ந்த 25 உறுப்பினர்களும் த.வெ.க.வுக்கு ஆதரவு அளித்திருந்தனர். இவர்களை தகுதிநீக்கம் செய்யக்கோரி அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகருக்கு கடிதம் எழுதியிருந்தார்.

அந்த கடிதம் மீதான நடவடிக்கை குறித்து சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர், தலைமைச்செயலகத்தில் நிருபர்களை சந்தித்தார்.



அப்போது அவர் கூறியதாவது:

நம்பிக்கை வாக்கெடுப்பில் த.வெ.க.வுக்கு ஆதரவு அளித்த அ.தி.மு.க. உறுப்பினர்கள் 25 பேரை தகுதிநீக்கம் செய்யக்கோரி எடப்பாடி பழனிசாமி சார்பில் மனு அளிக்கப்பட்டது. இது தொடர்பாக, அவரிடம் இருந்து 4 கடிதங்கள் வரப்பெற்றன. அதன்பின்னர், 21 உறுப்பினர்கள் அளித்த விளக்கத்தை ஏற்று, அவர்களை மன்னித்து விடுவதாக அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறினார். அவர் வழங்கிய 4 கடிதங்களை முறையாக ஆய்வு செய்தேன்.

எடப்பாடி பழனிசாமி 1352026 அன்று அனுப்பிய கடிதத்தில் தெரிவித்தபடி, உறுப்பினர்களின் மன்னிப்பு கோரிக்கையை ஏற்றுக்கொள்கிறேன். அனைத்து மேல் நடவடிக்கைகளையும் கைவிடுகிறேன். எஞ்சிய 4 பேர் மீது நடவடிக்கை எடுக்க அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கோரியிருந்தார். அதன்படி, உறுப்பினர்கள் எஸ்.ஜெயக்குமார், மரகதம் குமரவேல், சத்தியபாமா, இசக்கி சுப்பையா மீது நடவடிக்கை தொடங்கிவிட்டது. என்ன நடவடிக்கை என்பது பிறகு அறிவிக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## "ஆட்சிக் கலைப்பு கவிழ்ப்பு எண்ணம் இல்லை; ஸ்டாலின் பேச்சை திரித்து பரப்புகின்றனர்" : தங்கம் தென்னரசு

சென்னை: ஜூன்.10-

"ஆறு மாதம் அல்ல, மூன்று மாதம் கூட தாங்காது என்ற நிலைமையில் தான் தவெக ஆட்சி போய்க்கொண்டு இருக்கிறது" என்று தான் ஸ்டாலின் கூறினார். ஆனால் மூன்று மாதத்தில் இந்த ஆட்சி கவிழ்ந்துவிடும் என்று அவர் சொன்னதாகத் திரித்து செய்தி பரப்பப்படுகிறது" என்று முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கம் அளித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் : "தமிழ்நாட்டில் புதிதாக ஒரு ஆட்சி அமைந்து ஒரு மாதம் ஆகிறது. இந்த ஒரு மாதமும் டிவியைப் பார்த்தாலும் நாளிதழ்களைத் திருப்பினாலும் கொலையும், கொள்ளையும், பாலியல் வன்கொடுமைகளும், போதை மருந்து நடமாட்டமும் தான் செய்திகளாக இருக்கின்றன. பல்வேறு குற்றச் சம்பவங்களில் ஆளும் கட்சியான தவெக நிர்வாகிகளே சம்பந்தப்பட்டு உள்ளனர்.

ஆளும் கட்சியைச் சேர்ந்த பெண் ஒருவர், சொந்தக் கட்சிக்காரர்களால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு, அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அந்தப் பெண்ணால் குற்றம் சாட்டப்படும் ஆளும் கட்சி எம்.எல்.ஏ மீது இதுவரை நடவடிக்கை இல்லை. ஆனால் பாதிக்கப்பட்ட பெண்ணை கட்சியை விட்டு நீக்கி இருக்கிறது



தூய சக்தி என்று கபட வேடம் போடும் அரசு.

"இந்த ஆட்சியை ஆறு மாதம் விமர்சிக்க மாட்டோம்" என்று திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் சொல்லியிருந்தாலும், நிலைமை மிக மோசமாகப் போய் வரும் நிலையில் அவர் விமர்சனம் செய்தார். "ஆறு மாதம் அல்ல, மூன்று மாதம் கூட தாங்காது என்ற நிலைமையில் தான் ஆட்சி போய்க்கொண்டு இருக்கிறது" என்று ஸ்டாலின் பேசினார். ஆனால், மூன்று மாதத்தில் இந்த ஆட்சி கவிழ்ந்துவிடும் என்று அவர் சொன்னதாகத் திரித்து செய்தி பரப்பப்படுகிறது.

இது குறித்து பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் செய்தியாளர்கள் கேட்டபோது, திமுக தலைவர் அப்படி பேசியிருக்கக் கூடாது என்று பேசி உள்ளனர். ஆட்சி கவிழும் என்று ஸ்டாலின் பேசவுமில்லை; அது அவரது நிலைப்பாடும் அல்ல! "ஆறு மாதம் வரை, இந்த ஆட்சி பற்றி விமர்சித்துப் பேசப் போவதில்லை" என்று ஸ்டாலின் சொல்லியிருந்தார்.

ஆனால் நாள்தோறும் கொலை, கொள்ளை, அரிவாள் வெட்டுகள், போதை மருந்துகள் நடமாட்டம், பெட்ரோல் குண்டு வீச்சுகள், மின் வெட்டு, விவசாயிகள் போராட்டம், பாலியல் வன்கொடுமைகள் நடப்பதைப் பார்க்கும் போது, இதை விமர்சிக்காமல் எப்படி இருக்க முடியும் என்ற பொருளில், "மூன்று மாதமாவது தாங்குமா என்ற கேள்விக்குறியோடு தான் ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது" என்று பொருள்படும்படி தான் ஸ்டாலின் கருத்து தெரிவித்திருந்தார்.

ஆசை அறுபது நாள் என்பார்கள். ஆனால் இன்றைய ஆளும் கட்சிக்கு வாக்களித்தவர்கள் ஒரு வாரம் தான் அமைதியாக இருந்தார்கள். சமூக வலைத் தளங்கள் முழுக்கவே ஆளும் கட்சிக்கு எதிரான ஆவேசமான கருத்துகளைத் தான் மக்கள் சொல்லி வருகிறார்கள்.

இதைத் தான் ஸ்டாலின் தனது உரையில் சுட்டிக் காட்டினார்கள். கலைப்பு, கவிழ்ப்பு எண்ணத்தோடு அல்ல. மக்களே களைத்துப் போய்விட்டார்கள் அதற்குள்!" என்று தங்கம் தென்னரசு கூறியுள்ளார்.


**விளம்பரம் மற்றும் செய்திகள்**

**தொடர்புக்கு : 88705 00000**


## முதல்வர் விஜய் பத்திரிகையாளர்களை சந்திக்காதது ஏன்? செங்கோட்டையன் விளக்கம்

சென்னை: ஜூன்.10-

"முதல்வர் விஜய் செயல்பாடுகளையே முக்கியமாக நினைக்கிறார். சொன்னதைச் செய்கிறோமா, மக்கள் அதில் மகிழ்ச்சி அடைகிறார்களா என்பதையே முதல்வர் பார்க்கிறார். பத்திரிகையாளர்களை சந்தித்து, அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்வதைக் காட்டிலும், செயல்வடிவத்திலே அவருடைய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன." என தமிழக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் செங்கோட்டையன்,



"வருவாய் துறையில் மக்களுக்கான சேவைகளை விரைவாக வழங்குவது குறித்து அதிகாரிகளுடன் ஆய்வுப் பணிகளை இன்று நடத்துகிறோம். குறிப்பாக சாதித் சான்றிதழ் விரைந்து கிடைக்க என்னென்ன மாற்றங்கள் செய்ய வேண்டும் என்பதற்காக முடிவுகளை மேற்கொள்ள இருக்கிறோம். ரேஷன் கார்டுகள், முதியோர் உதவித் தொகை, சமூக நலத் திட்டங்கள் உள்ளிட்ட பல திட்டங்களை எப்படி எளிதாக கிடைக்கும் வகையில் நிறைவேற்றுவது என ஆய்வு செய்ய உள்ளோம்.

ஆன்லைன் முறையில் பதிவு செய்யும்போது, சில நேரங்களில் கால தாமதம் ஏற்படுவதாகக் குறைகள் உள்ளது. ஆன்லைன் மூலமாக பதிவு செய்தவுடன், அந்தந்த வருவாய் வட்டத்தில் விஏஓக்கள் ஆய்வு செய்து அந்தப் பணிகளை 5 நாட்களுக்குள் முடிக்க வேண்டும். அவ்வாறு முடிக்கவில்லையென்றால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அரசு நிலங்கள் எந்தெந்த இடங்களில் உள்ளது, அதனை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றியும் ஆய்வு செய்யவுள்ளோம். பட்டா மாறுதலில் உள்ள தடைகளை நிவர்த்தி செய்யவும் நடவடிக்கை எடுக்க உள்ளோம். தமிழகத்தின் பேரிடர் மேலாண்மை பணிக்கு ரூ.1000 கோடி தேவை என சொன்னோம், அதனை முன்னெச்சரிக்கையாகவே மத்திய அரசு வழங்கியிருக்கிறது.

முதல்வர் செயல்பாடுகளையே முக்கியமாக நினைக்கிறார். சொன்னதைச் செய்கிறோமா, மக்கள் அதில் மகிழ்ச்சி அடைகிறார்களா என்பதையே முதல்வர் பார்க்கிறார். பத்திரிகையாளர்களை சந்தித்து, அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்வதை காட்டிலும், செயல்வடிவத்திலே அவருடைய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

மாரிதாஸ் எந்த அடிப்படையில் கைது செய்யப்பட்டார் என சட்ட ரீதியாக தெரியவில்லை. பத்திரிகை சுதந்திரம் என்பது தனிப்பட்ட விமர்சனமாக இல்லாமல் மக்கள் வளர்ச்சிப் பணிகளில் இருக்க வேண்டும். அப்போதுதான் நாடே வளர்ச்சியடையும்." என்று தெரிவித்துள்ளார்.


## சொத்து முடக்க நடவடிக்கைக்கு எதிராக லாட்டரி மார்ட்டின் தொடர்ந்த வழக்கு: அமலாக்கத் துறை பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு

சென்னை: ஜூன்.10-

லாட்டரி அதிபர் மார்ட்டினுக்கு சொந்தமான 457 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்கள் முடக்கத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில், அமலாக்கத் துறை பதிலளிக்க சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2009 2010ம் ஆண்டுகளில், விதிகளை மீறி சிக்கிம் மாநில லாட்டரி விற்றதன் மூலம் 910 கோடி ரூபாய் அளவுக்கு சிக்கிம் மாநில அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியதாக, லாட்டரி அதிபர் மார்ட்டின் உள்ளிட்டோருக்கு எதிராக சிபிஐ வழக்குப்பதிவு செய்தது.

கேரளா நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள இந்த வழக்கின் அடிப்படையில் அமலாக்கத் துறையும் வழக்குப்



பதிவு செய்து, லாட்டரி அதிபர் மார்ட்டின் மற்றும் அவரது குடும்பத்தினர் தொடர்புடைய இடங்களில் சோதனை நடத்தியது. சோதனையின் முடிவில், லாட்டரி அதிபர் மார்ட்டினுக்கு தொடர்புடைய 457 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்களை அமலாக்கத் துறை முடக்கம் செய்தது. அந்த முடக்கத்தை அமலாக்கத் துறை மேல்முறையீட்டு தீர்ப்பாயம் உறுதி செய்தது.

இதை எதிர்த்து, மார்ட்டின் மற்றும் அவரது நிறுவனங்கள் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. அந்த மனுக்களில், சொத்துக்களை முடக்கம் செய்த உத்தரவை ரத்து செய்து, சொத்துக்களை விடுவிக்க உத்தரவிட வேண்டும் என கோரப்பட்டிருந்தது.

இந்த வழக்குகளை விசாரித்த தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள் முருகன் அமர்வு, மனுவுக்கு ஆறு வாரங்களில் பதிலளிக்கும்படி, அமலாக்கத் துறைக்கு உத்தரவிட்டு, விசாரணையை தள்ளிவைத்தது.



## “மதுரையில் கூடிப் பேசிய தமிழ் நெஞ்சங்கள்!” தமிழ்நாடு தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு அவசர ஆலோசனைக் கூட்டம்!

மதுரை, ஜூன்.10-

தமிழ்நாடு தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு மண்டல, மாவட்ட நிர்வாகிகள் மற்றும் 2வது மாநில மாநாடு நடத்துவது குறித்த முக்கிய ஆலோசனைக் கூட்டம் மதுரை கே.புதூர் அல் அமீன் மேல்நிலைப்பள்ளியில் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது.இக்கூட்டத்திற்கு அல் அமீன் மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் ஷேக்நபி மற்றும் மண்டலச் செயலாளர் செல்வம் ஆகியோர் நெஞ்சார்ந்த வரவேற்புரையாற்றினர். மண்டலத் தலைவரும், கவிஞரும், எழுத்தாளருமான அழகுராஜ் இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். மாநிலத் தலைவர் தமிழ்ச்செம்மல் கவிஞர் பொன் சந்திரன் மாநாட்டின் நோக்கங்கள் குறித்த அறிமுகவுரையாற்றினார். மாநிலத் துணைத் தலைவர்கள் கவிஞர்கள் தேசிங்குராஜன் மற்றும் தாரை இராஜமாணிக்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.இக்கூட்டத்தில், கூட்டமைப்பின் 2வது மாநில மாநாட்டை நடத்துவதற்கான நாள் மற்றும் இடம் தேர்வு செய்வது, மாநாட்டு நிகழ்ச்சிகளை முறைப்படுத்துவது, சிறப்பு விருந்தினர்களை அழைப்பது உள்ளிட்ட பல்வேறு முக்கியத் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன. இம்மாபெரும் ஆலோசனைக் கூட்டத்தில் மதுரை, விருதுநகர், தேனி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ்ச் சங்க நிர்வாகிகள் திரளாகக் கலந்துகொண்டனர். நிறைவாக, மதுரை மண்டல ஒருங்கிணைப்பாளர் கவிஞர் தொல்காப்பியன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

## பிரபலங்களின் பெயர்களில் போலித் திட்டம்: ஓய்வு வங்கி அதிகாரி ரூ.90 லட்சம் இழந்தது எப்படி?

அகமதாபாத், ஜூன்.10-

குஜராத் மாநிலம் அகமதாபாத்தைச் சேர்ந்த 73 வயது முதியவர். பாரத ஸ்டேட் வங்கியில் (எஸ்பிஐ) பணியாற்றி ஓய்வு பெற்றவர். கடந்த 2025 நவம்பரில் ஒரு முதலீட்டு வாய்ப்பைக் கண்டுள்ளார். அது உண்மையானது என்று நம்பவைப்பதற்காக, பிரபல தொழிலதிபர்களின் பெயர்கள் அதில் தவறாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன. இதை நம்பி அவர் அதில் இருந்த இணைப்பை கிளிக் செய்துள்ளார்.இந்த நடவடிக்கை அவரை ‘வென்ட்ரா ட்ரேட்' என்ற வர்த்தக செயலியை பதிவிறக்கம் செய்ய வைத்தது. இதுவே அவரது பல மாத கால துயரத்துக்கும், இறுதியில் வாழ்நாள் சேமிப்பை அவர் இழப்பதற்கும் தொடக்கமாக அமைந்தது. செயலியை நிறுவியதைத் தொடர்ந்து, வாட்ஸ்அப் மூலம் அந்த முதியவரைத்



தொடர்பு கொண்ட சிலர், தங்களை தொழில்முறை முதலீட்டு ஆலோசகர்கள் மற்றும் போர்ட் ஃபோலியோ மேலாளர்கள் என்று அறிமுகப்படுத்திக் கொண்டனர்.பங்குச் சந்தை முதலீடுகள் மற்றும் கமாடிட்டி வர்த்தகம் மூலம் அதிக லாபம் தருவதாக அவர்கள் உறுதியளித்தனர். ஓய்வுபெற்ற வங்கி அதிகாரியின் நம்பிக்கையைப் பெறுவதற்காக, மோசடி செய்பவர்கள் ஆரம்பத்தில் அவரது முந்தைய முதலீடுகளின் லாபம் என்று கூறி ரூ.21,999ஐ அவரது கணக்கில் செலுத்தினர். இந்த வெற்றியினாலும், அந்த செயலியின் திரையில் காட்டப்பட்ட போலி லாபங்களினாலும் ஊக்கமடைந்த அந்த முதியவர், 2025 நவம்பர் முதல் 2026 ஏப்ரல் வரையிலான கால கட்டத்தில் ஆர்.டி.ஜி.எஸ். மூலம் பெரும் தொகையை பரிமாற்றம் செய்தார்.

பாதிக்கப்பட்ட முதியவர் தனது கணக்கில் சேர்ந்த தொகையைத் திரும்பப் பெற முயன்றபோதுதான் இந்த மோசடி வெளிச்சத்துக்கு வந்தது. விதிமுறைச் சிக்கல்கள் காரணமாக அவரது வர்த்தகக் கணக்கு முடக்கப்பட்டுள்ளதாகக் கூறி மோசடி செய்பவர்கள் அவரது கோரிக்கையை நிராகரித்தனர்.

ஒட்டுமொத்த முதலீட்டுத் தளமும் ஒரு திட்டமிட்ட போலி கட்டமைப்பு என்பதை உணர்வதற்குள், கடந்த 7 மாத காலத்தில் அந்த ஓய்வுபெற்ற வங்கி அதிகாரி மொத்தம் ரூ.90.75 லட்சத்தை இழந்துள்ளார். அவரது புகாரைத் தொடர்ந்து, போலீஸார் விசாரிக்கின்றனர்



## முத்துப்பேட்டை கடைத்தெருவில் விளம்பர பலகை அகற்றி பொருட்களை பறிமுதல் செய்த காவல்துறையினரால் பரபரப்பு

திருவாரூர், ஜூன்.10-

முத்துப்பேட்டை கடைத்தெருவில் இன்று டிஎஸ்பி ராஜூ தலைமையில் இன்ஸ்பெக்டர் முத்துக்குமாரன், சப்.இன்ஸ்பெக்டர் ராகுல் தலைமையில் போலீசார் பழைய பேருந்து நிலையம் மற்றும் திருத்துறைப்பூண்டி சாலை பகுதியில் பேரூராட்சி பணியாளர்களை வைத்துக்கொண்டு திடீரென்று கடைகளுக்கு முன்பாக உள்ள விளம்பரப் பலகைகளை அதிரடியாக அகற்றி பேரூராட்சி டிராக்டர்களில் ஏற்றி சென்றனர். மேலும் கடைகளுக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த பொருட்களையும் பறிமுதல் செய்து எடுத்துச் சென்றனர். மேலும் கடை முன்பாக இருந்த விளம்பர பலகைகளை போலீசார் சேதப்படுத்தினர்.மேலும் பொருட்களை எடுத்து வீசினர். இதனால் வியாபாரிகளுக்கும் போலீசாருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனையடுத்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற முத்துப்பேட்டை வர்த்தகக்கழக தலைவர் நைனா முகமது தலைமையில் நிர்வாகிகள் ஒன்று கூடி டிஎஸ்பி ராஜூவை நேரில் சந்தித்து 'தாங்கள் முன்கூட்டியே சொல்லியிருந்தால் நாங்களே அகற்றி இருப்போம் திடீர் என்று வந்து இதுபோல அதிரடி பணி செய்வது நியாயம் இல்லை. தற்போது பணியை நிறுத்துங்கள் கால அவகாசம் கொடுங்கள்' என்று முறையிட்டனர்.

இதனையடுத்து டிஎஸ்பி ராஜூ 'இன்றும் நாளையும் இரு நாள் அவகாசம் தருகிறோம் அதற்குள் அகற்றிக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் நாளை மறுதினம் நாங்களே அகற்றுவோம்' என்று கூறினார். அதனை தொடர்ந்து அந்த பணி கைவிடப்பட்டு போலீசார் திரும்பி சென்றனர். மேலும் வியாபாரிகளிடம் பறிமுதல் செய்த சில பொருட்களை மற்றும் திரும்ப வழங்கினர். இதனால் முத்துப்பேட்டையில் சுமார் ஒரு மணி நேரத்துக்கு மேலாக பெரும் பரபரப்பு ஏற்பட்டது

## தொழிலாளர் நல ஆணைய விதிகளின்படி தமிழ்நாடு உழைக்கும் செய்தியாளர்கள் சங்கத்தின் அதிரடித் தீர்மானம்!

மதுரை, ஜூன்.10-

தமிழ்நாடு உழைக்கும் செய்தியாளர்கள் சங்கத்தின் சார்பில், தமிழகம் முழுவதும் விரைவில் புதிய நிர்வாகிகளை நியமிப்பது மற்றும் சனிக்கிழமைக்குள் ஆவணங்களை ஒப்படைக்காத உறுப்பினர்களைத் தகுதி நீக்கம் செய்வது உள்ளிட்ட பல்வேறு அதிரடித் தீர்மானங்கள் மதுரையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு, சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் சமய செல்வம் அனைவரையும்



வரவேற்றுப் பேசினார். மாநிலத் தலைவர் ரவிச்சந்திர பாண்டியன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் நடப்பாண்டிற்கான (2026) புதிய அடையாள அட்டைகளை (ID Cards) வழங்கிச் சிறப்புரையாற்றினார்.இக்கூட்டத்தில், தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் புதிய உறுப்பினர்களை அதிக எண்ணிக்கையில் சேர்க்க வேண்டும், ஒவ்வொரு மாவட்டம் வாரியாகப் புதிய நிர்வாகிகளை விரைந்து நியமிக்க வேண்டும் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. குறிப்பாக, தொழிலாளர் நல ஆணைய விதிகளின்படி சங்கத்திற்குத் தேவையான முக்கிய ஆவணங்களை நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் வரும் சனிக்கிழமைக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், தவறும்பட்சத்தில் அவர்கள் தகுதி நீக்கம் செய்யப்படுவர் என்றும் கறாரான தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இக்கூட்டத்தில் மாநிலத் துணைத்தலைவர்கள் ஜெயராமன், வல்லத்தரசு, செய்தித் தொடர்பாளர் அஜீத்குமார், ஒருங்கிணைப்பாளர்கள் பாண்டி முருகன், மணிகண்டன் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் வீரக்குமார், திருச்சிற்றம்பலம், ராமசாமி, நாகேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். நிறைவாக, மாநிலப் பொருளாளர் புஷ்பராஜன் நன்றி கூறினார்.

## ஹைதராபாத் பாரில் பாலியல் கும்பல் கைது இளம் பெண் ஐபிஎஸ் அதிகாரி நடவடிக்கை

ஹைதராபாத், ஜூன்.10-

ஹைதராபாத் கூகட்பல்லி பகுதியில் உள்ள ‘கிளப் மஸ்தி' எனும் பார் வெகு பிரசித்தம். இதனை ‘குயின்ஸ் அண்ட் கிங்ஸ் பப்' என்றும் அழைப்பர். இங்கு இரவில் நிபந்தனைகளை மீறி ஆட்டம், பாட்டு, கொண்டாட்டம் என கேளிக்கை விருந்துகள் நடந்து கொண்டே இருக்கும்.இந்த பாரில் இளம் பெண்கள் நடனமாடியபடியே, கஸ்டமர்களை கவர்ந்து, அவர்களை அளவுக்கு அதிகமாக மதுபானம் குடிக்க வைத்து, பணத்தை பில்லுக்கு மேல் போட்டு தீட்டுவதும் வழக்கம் என கூறுவர். அப்படியே அந்த கஸ்டமரை மடக்கி அதே பாருக்குள் உள்ள அறைகளில் பாலியல் தொழிலில் ஈடுபடுவதாகவும் புகார்கள் உண்டு. மேலும், 18 வயதுக்குள் உள்ள மைனர்



களும் மிக அதிகமாக வரும் பார் இது தான் எனும் பெயரும் இதற்கு உண்டு.இவ்வாறு பல நிபந்தனைகளை மீறி நடக்கும் இந்த பார் மீது பல்வேறு புகார்களும் வழக்குகளும் உள்ளன. இதனிடையே சைபராபாத் பகுதிக்கு 2020 தெலங்கானா பிரிவைச் சேர்ந்த ரித்தி ராஜ் இணை போலீஸ் ஆணையராக பணியில் சேர்ந்தார். இவருக்கு வந்த ரகசிய தகவலின் படி, கடந்த ஞாயிற்றுக் கிழமை நள்ளிரவு சாதாரண பெண்ணைப் போல் கூகட்பல்லி கிளப் மஸ்தி பாருக்கு சென்றார். அங்கு நடக்கும் அனைத்தையும் கவனித்தார். உடனே, வெளியில் காத்திருந்த போலீஸாருக்கு தகவல் கொடுத்தார். அவர்களும் அதிரடியாக அந்த பாருக்குள் நுழைந்தனர். அப்போது பாருக்குள் நிபந்தனைகளை மீறி நடந்து கொண்ட 5 ஆண்கள் மற்றும் 4 பெண்களை கைது செய்து அழைத்துச் சென்று போலீஸ் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தினார். அப்போது இந்த பாரின் பின்புலமாக இருந்து செயல்படும் அரசியல்வாதிகள், அரசு அதிகாரிகள் குறித்தும் தெரியவந்தது. மேலும், இந்த பாரில் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் கை மாறுகிறதா ? எனும் கோணத்திலும் தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது.



## ஆந்திராவின் விசாகப்பட்டினம் இரும்பு ஆலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 9 தொழிலாளர்கள் உயிரிழப்பு

விசாகப்பட்டினம், ஜூன்.10-

ஆந்திராவின் விசாகப்பட்டினம் இரும்பு ஆலையில் நேற்று மாலை ஏற்பட்ட தீ விபத்தில் 9 தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். 11 பேர் படுகாயமடைந்தனர். இதில் 2 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

விசாகப்பட்டினத்தில் உள்ள இரும்பு தொழிற்சாலையில் ஷிப்ட் அடிப்படையில் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இந்நிலையில், நேற்று மாலை சரியாக 4.15 மணிக்கு, எஸ்எம்எஸ் 2 கிடங்கில் இருந்து எஸ்டிசி 3 க்கு 1500 டிகிரி வெப்பத்தில் உருக்கிய இரும்பு குழம்பை ராட்சத பக்கெட் மூலம் இடமாற்றும் பணி நடந்து கொண்டிருந்தது. அப்போது யாருமே எதிர்பாராத வகையில் அந்த இரும்பு பிழம்பு வெடித்துச் சிதறியது.இந்த கோர விபத்தில் அப்பாராவ், பிரபாகர் ராவ், கிருஷ்ணா, ரமணா, அப்பல் ராவ், த்ரிநாத், குமார் மற்றும் அடையாளம் தெரியாத இருவர் என மொத்தம் 9 தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். அதே நேரத்தில் தீப்பிழம்பு உருகி விழுந்து மேலும் 11 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் விசாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. சம்பவ இடத்திற்கு தீயணைப்பு படையினர், போலீஸார் விரைந்து சென்று தீயை கட்டுப்படுத்தினர்.இது குறித்து தகவல் அறிந்த ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, துணை முதல்வர் பவன் கல்யாண், அமைச்சர் லோகேஷ் ஆகியோர் ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்து உள்ளனர். காயமடைந்தோருக்கு உயர் சிகிச்சை அளிக்கும்படி அதிகாரிகளுக்கு முதல்வர் சந்திரபாபு நாயுடு உத்தரவிட்டு உள்ளார்.

ஆந்திர உள்துறை அமைச்சர் அனிதா சம்பவ இடத்துக்கு நேரில் சென்று ஆய்வு செய்தார். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவோருக்கு ஆறுதல் கூறினார். உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்தார். இந்த விபத்து குறித்து உயர்நிலை விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

## காவல் நிலையத்திற்குள் சென்று பெண் தலைமை காவலரை மிரட்டிய சரித்திர பதிவேடு குற்றவாளிகளான அண்ணன், தம்பி ஆகிய இருவர் கைது

சிவகங்கை, ஜூன்.10-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி தெற்கு காவல் நிலைய தலைமை காவலர் ஜெயா செல்வி. காவல் நிலையத்தில் அவர் மட்டும் பணியில் இருந்த போது அங்கு வந்த சரித்திர பதிவேடு குற்றவாளிகள்அண்ணன் தம்பிகளான சூர்யபிரகாஷ் (எ) சூர்யா (27) , தங்கசாமி என்ற நவீன் இருவரும் நாங்கள் வீட்டில் இல்லாத போது எங்களை வீட்டிற்கு வந்து விசாரித்த போலீஸ் யார் என்று சொல்ல மாட்டியா? என்றும் தகாத வார்த்தைகளால் பெண் காவலரை தீட்டியுள்ளனர். இனியும் எங்களை தேடி வீட்டிற்கு போலீஸ் வந்தால்



கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டியுள்ளனர்.பெண் காவலர் இருவரையும் காவல் நிலையத்தை விட்டு வெளியே போக சொல்லியும் போகாமல் தகராறு செய்தவர்களை ரோந்து பணிக்கு சென்ற ஆய்வாளர் மற்றும் போலீசாரை வரவழைத்தார். காவல் நிலையம் வந்த ஆய்வாளர், சரித்திர பதிவேடு குற்றவாளிகளான அண்ணன் தம்பிகளை பிடித்துவடக்கு காவல் நிலையத்தில் ஒப்படைத்தார். இருவர் மீதும் பெண் காவலரை மிரட்டியாகவடக்கு காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. காவல் நிலையத்திற்கு சென்று பெண் காவலரை சரித்திரப் பதிவேடு குற்றவ ாளிகள் மிரட்டிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது

## “பள்ளி அருகே மதுக்கடைகள்... அரைகுறை ஆடையுடன் விழும் குடிகாரர்கள்!” சேலத்தில் கலெக்டரிடம் மனு!

சேலம், ஜூன்.10-

சேலம் மாவட்டம் மல்லமூப்பம்பட்டி பகுதியில் பள்ளி மற்றும் வழிபாட்டுத் தலங்கள் அருகே விதிமுறைகளை மீறிச் செயல்பட்டு வரும் மூன்று அரசு மதுக்கடைகளை உடனடியாக மூடக் கோரியும், தவறும்பட்சத்தில் மக்களைத் திரட்டிப் பிரம்மாண்ட போராட்டம் நடத்தப்படும் எனப் பொதுமக்கள் மாவட்ட ஆட்சியரிடம் அதிரடி எச்சரிக்கை விடுத்துள்ளனர்.சேலம் மாவட்டம் மல்லமூப்பம்பட்டி, காட்டுவளவு கிராமத்தைச் சேர்ந்த முருகன் என்பவர்



திங்கட்கிழமையன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அளித்த அந்த மனுவில், "தங்கள் பகுதியில் அமைந்துள்ள புது ரோடு பேருந்து நிலையம் மற்றும் பெரியாண்டிச்சி கோவில் அருகில் டாஸ்மாக் மதுக்கடை எண் 7237 செயல்பட்டு வருகிறது. இதற்கு நேர் எதிரே, சின்மயா கிருபா நர்சரி பள்ளிக்குச் செல்லும் பச்சிளம் குழந்தைகளுக்கு ஆபத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தும் வகையில் மதுக்கடை எண் 7112உம், அடுத்த ஒரு கிலோமீட்டர் தொலைவில் பாலக்காடு சித்தனூர் மதுக்கடை எண் 7123உம் அமைந்துள்ளன" என்று குறிப்பிட்டுள்ளார்.இந்த மூன்று மதுக்கடைகளும் மாநில நெடுஞ்சாலையையொட்டிச் சட்டத்திற்குப் புறம்பாக அமைந்திருப்பதால், அங்கு வரும் குடிகாரர்கள் அரைகுறை ஆடைகளுடன் சாலையில் விழுந்து கிடப்பதாகவும், இதனால் வாகன ஓட்டிகள் அடிக்கடி விபத்துக்குள்ளாகி உயிரிழப்புகள் ஏற்படுவதாகவும் மனுவில் சாடப்பட்டுள்ளது. இது குறித்து ஏற்கனவே பலமுறை மனு அளித்தும் மாவட்ட நிர்வாகம் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால், வரும் நாட்களில் பொதுமக்கள் அனைவரும் திரண்டு மதுக்கடைகளின் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும், இந்த மோசமான நிலைக்கு அரசே பொறுப்பேற்று உடனடியாக 3 கடைகளையும் மூட வேண்டும் என்றும் அந்த மனுவில் முருகன் வலியுறுத்தியுள்ளார்.


# ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே பட்டாசு ஆலையில் வெடி விபத்தில் காயமடைந்த தொழிலாளி உயிரிழப்பு



ஸ்ரீவில்லிபுத்தூர், ஜூன்.10-
ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே அச்சம்தவிர்த்தான் பகுதியில் உள்ள பட்டாசு ஆலையில் கடந்த வெள்ளிக் கிழமை ஏற்பட்ட வெடி விபத்தில் படுகாயம் அடைந்த தொழிலாளி சிகிச்சை பலனின்றி இன்று காலை உயிரிழந்தார்.

சிவகாசி அருகே திருத்தங்கல் முருகன் காலனியை சேர்ந்தவர் அய்யனார் (57). இவர் மாவட்ட வருவாய் அலுவலர் உரிமம் பெற்றுஸ்ரீவில்லிபுத்தூர் அருகே அச்சம்தவிர்த்தான் கிராமத்தில் பட்டாசு ஆலை நடத்தி வருகிறார். இங்கு உள்ள 7 அறைகளில் 10க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பட்டாசு உற்பத்தியில் ஈடுபட்டு வந்தனர். கடந்த வாரம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணி அளவில் வெடி மருந்துகளை எடை போடும் போது உராய்வு ஏற்பட்டு வெடி விபத்து ஏற்பட்டது.அதில் அங்கு பணியில் ஈடுபட்டிருந்த வடக்கு அச்சம் தவிர்த்தான் கிராமத்தை சேர்ந்த கருப்பசாமி (52) என்பவர் காயமடைந்தார். உடல் முழுவதும் தீக்காயத்துடன் சிவகாசி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட கருப்பசாமி முதலுதவிக்குப் பின் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுமதிக்கப்பட்டார். அங்குதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த கருப்பசாமி இன்று காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதனிடையே, விபத்து குறித்து பட்டாசு ஆலை உரிமையாளர் மீது வன்னியம்பட்டி போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# கரூர் அருகே லாரி மீது கார் மோதி விபத்து: கர்ப்பிணி உள்பட மூவர் உயிரிழப்பு





கரூர், ஜூன்.10-
கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி அருகே நின்றிருந்த லாரி மீது கார் மோதிய விபத்தில் 8 மாத கர்ப்பிணி, கணவர், ஓட்டுநர் உயிரிழந்தனர். 2 வயது குழந்தை, இருசக்கர வாகன ஓட்டுநர் காயமடைந்தனர்.

மதுரை மாவட்டம் உசிலம்பட்டியைச் சேர்ந்தவர் அரவிந்த் (30). இவர் மனைவி 8 மாத கர்ப்பிணியான ஜனனி (28). இவர்கள் மகள் துவிதா (2). மூவரும் குடும்பத்துடன் பெங்களூரு சென்றுவிட்டு காரில் நேற்று உசிலம்பட்டி திரும்பிக் கொண்டிருந்தனர். காரை உசிலம்பட்டி நேதாஜி நகரை சேர்ந்த வீரா (40) என்பவர் ஓட்டி வந்துள்ளார். இன்று (ஜூன் 9ம் தேதி) காலை 6 மணி அளவில் கரூர் மாவட்டம் அரவக்குறிச்சியை அடுத்த ஈசநத்தம் பிரிவு அருகே கார் சென்று கொண்டிருந்தது. அப்போது, முன்னாள் சென்ற இருசக்கர வாகனம் திடீரென இடது புறம் திரும்ப முயன்று வேகத்தை குறைக்கவே, வாகன மோதலை தவிர்க்க காரை திருப்ப முயன்ற ஓட்டுநர், இருசக்கர வாகனத்தின் மீது மோதி சாலையோரம் நின்றுகொண்டிருந்த லாரியின் மீதும் பயங்கரமாக மோதி விபத்துக்குள்ளானது.

இதில், படுகாயமடைந்த கார் ஓட்டுநர் வீரா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். விபத்து குறித்து தகவலறிந்த அரவக்குறிச்சி போலீஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று படுகாயமடைந்த அரவிந்த், அவர் மனைவி ஜனனி, துவிதா ஆகியோரை இடிபாடுகளில் இருந்து மீட்டனர். இதில் மருத்துவமனை கொண்டு செல்லும் வழியில் அரவிந்த், ஜனனி ஆகியோர் உயிரிழந்தனர். இதில் சிறுமி துவிதா, இருசக்கர வாகன ஓட்டுநர் அரவக்குறிச்சி கலைவாணர் தெருவைச் சேர்ந்த பாண்டித்துரை (32) ஆகிய இருவரும் கரூர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனிடையே, விபத்தில் உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்டு கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த அரவக்குறிச்சி போலீஸார், விபத்து குறித்து வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அயோத்தி ராமர் கோயில் அறக்கட்டளையின் பல கோடி ரூபாய் மாயம்



புதுடெல்லி, ஜூன்.10-
உத்தர பிரதேச மாநிலம் அயோத்தியில் உள்ள ராமர் கோயிலுக்காக இந்தியா மட்டுமல்லாது, உலகம் முழுவதிலும் இருந்து நன்கொடை குவிந்து வருகிறது. ரொக்கம் மட்டுமல்லாமல் தங்கம், வைரம் மற்றும் வெள்ளி போன்ற உலோகங்களும் நன்கொடையாக அளிக்கப்படுகின்றன.இந்த சொத்துகளை உச்ச நீதிமன்ற உத்தரவின் பேரில் நிறுவப்பட்டுள்ள ஸ்ரீ ராம ஜென்ம பூமி தீர்த்த ஷேத்ரா அறக்கட்டளை நிர்வகித்து வருகிறது. இந்நிலையில், நன்கொடை விவரங்கள் சரியாக வெளியிடப் படவில்லை என்றும் குறிப்பிட்ட தொகையைக் காணவில்லை என்றும் புகார் எழுந்துள்ளது. இது குறித்து நீதி விசாரணை நடத்த வேண்டும் என உ.பி.எதிர்க்கட்சி யான சமாஜ் வாதியின் தலைவர் அகிலேஷ் வலியுறுத்தி உள்ளார்.இது குறித்து முன்னாள் முதல்வரான அகிலேஷ் தனது சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: அயோத்தி ராமர் கோயில் அறக்கட்டளை மூலம் பக்தர்களிடமிருந்து நன்கொடையாக பெறப்பட்ட கோடிக்கணக்கான ரூபாய் காணாமல் போனதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்த விவகாரம் கோயில் அறக்கட்டளைக்கும் ஒரு தர்மசங்கடமான சூழலை உருவாக்கியுள்ளது.இது குறித்து இது வரை யாரும் ஏன் விளக்கம் அளிக்க முன்வரவில்லை? இதற்கு பதிலளிக்காமல் ராமர் கோயில் அறக்கட்டளை மவுனமாக உள்ளது. இது ராம பக்தர்களுக்கு ஆழ்ந்த கவலையளிக்கும் விஷயம். இதில் வெளிப்படைத்தன்மை தேவை. லட்சக் கணக்கான பக்தர்களின் நம்பிக்கையோடு நேரடியாகத் தொடர்புடைய விவகாரம் என்பதால், இதுகுறித்து நீதிமன்றம் தாமாக முன்வந்து நீதி விசாரணை நடத்த வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.கோயில் அறக்கட்டளைக்கு கடந்த 2025 26 நிதியாண்டில் சுமார் ரூ.220.81 கோடி வருவாய் கிடைத்துள்ளது. இதில் பெரும்பகுதி பக்தர்களின் நன்கொடை மற்றும் காணிக்கை மூலமாகவே கிடைத்துள்ளது. இதில் 'ராம் லல்லா' (குழந்தை ராமர்) சன்னதியில் உள்ள காணிக்கைப் பெட்டிகள் மூலம் அதிகபட்சமாக ரூ.54.79 கோடி வசூலாகியுள்ளது. ஏப்ரல் 2025 முதல் பிப்ரவரி 2026 வரை, நன்கொடை கவுண்ட்டர்கள் மூலம் ரூ.18.88 கோடியும், இணைய வழி நன்கொடை மூலம் ரூ.8.33 கோடியும் கிடைத்துள்ளன.வெளி நாட்டு பங்களிப்பு ஒழுங்கு முறைச் சட்டத்தின் கீழ் வெளிநாடுகளில் இருந்து ரூ.78 லட்சம் நன் கொடையாகப் பெறப்பட்டுள்ளது. நன்கொடை தவிர, வங்கி வைப்புத்தொகை மீதான வட்டி மூலம் அறக்கட்டளைக்கு சுமார் ரூ.138 கோடி வருவாய் கிடைத்துள்ளது. இதன் மூலம் அதன் மொத்த வருவாய் ரூ.220 கோடியைத் தாண்டியுள்ளது. இதுபோல், ராமர் கோயில் அறக்கட்டளை மீது புகார்கள் எழுவது முதன் முறை அல்ல.இதற்கு முன், அயோத்தியில் நிலம் வாங்கியதில் பல கோடி ரூபாய் முறைகேடு நடந்ததாக அகிலேஷ் மற்றும் பிற எதிர்க்கட்சித் தலைவர்கள் குற்றம் சாட்டியிருந்தனர். அந்தக் குற்றச்சாட்டுகளை அறக்கட்டளையும் அதன் பொதுச் செயலாளர் சம்பத் ராயும் தொடர்ந்து மறுத்து வந்தனர். இந்நிலையில், மீண்டும் கோடிக் கணக்கான ரூபாய் காணாமல் போனதாக புகார் எழுந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# தொடர் மின்வெட்டுக்கு உண்மை காரணம் என்ன? அரசு வெளிப்படையாக அறிவிக்க தவாக வலியுறுத்தல்



சென்னை, ஜூன்.10-
தமிழகத்தில் பல்வேறு இடங்களில் தொடர் மின்வெட்டுக்கு உண்மையான காரணத்தை தமிழக அரசு வெளிப்படையாக மக்களிடம் அறிவிக்க வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் தி.வேல்முருகன் வலியுறுத்தியுள்ளார்.இது குறித்து அவர் இன்று வெளியிட்ட அறிக்கையில், "தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஒவ்வொரு நாளும், குறிப்பாக இரவு நேரங்களில், தொடர்ச்சியாக நிகழும் மின்வெட்டுகள் மக்களின் இயல்பு வாழ்க்கையை சிதைத்து கொண்டிருக்கின்றன. கடும் வெப்பத்தால் தகிக்கும் இரவு வேளைகளில், குழந்தைகள் தூங்க முடியாமல் தவிக்கின்றனர். முதியவர்கள் மூச்சுத் திணறலோடு இரவைக் கழிக்கின்றனர்.தேர்வுக்குத் தயாராகும் மாணவர்களின் கனவுகள் இருளில் கரைகின்றன. சிறு தொழில் செய்பவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. மின்சாரம் என்பது வெறும் வசதி அல்ல. இன்றைய காலகட்டத்தில் அது மனிதர்களின் அன்றாட வாழ்வின் அவசியத் தேவையாக மாறியுள்ளது. மின்சாரம் துண்டிக்கப்படும் போதெல்லாம் பாதிக்கப்படுவது சாதாரண ஏழை நடுத்தர மக்களின் வாழ்க்கை மட்டுமே.நீண்ட நேர மின்வெட்டுகளுக்கான உண்மையான காரணம் என்ன? இன்று மக்கள் மத்தியில் எழுந்திருக்கும் இந்த சந்தேகத்தை வெறும் அரசியல் விமர்சனமாகக் கடந்து செல்ல முடியாது. ஏனெனில், இருளில் தவிப்பது ஏழை மக்களின் வீடுகள். தேர்வை எதிர்நோக்கும் மாணவன் மெழுகுவர்த்தி ஒளியில் படிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.நோயாளிகள், முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் கடும் அவதிக்குள்ளாகின்றனர். ஆனால் இதற்கான தெளிவான விளக்கத்தை வழங்க வேண்டிய பொறுப்பில் இருப்பவர்கள் கள்ள மவுனம் காக்கின்றனர்.மக்கள் கேட்பது மின் சாரத்தை மட்டும் அல்ல. உண்மையையும், வெளிப்படைத்தன்மையையும், பொறுப்புணர்வையும்தான். எனவே, தொடர் மின் வெட்டுக்கு உண்மையான காரணங்களை வெளிப்படையாக மக்களிடம் தமிழக அறிவிக்க வேண்டும். இதுதவிர, இவ்விவகாரத்தில் தமிழக அரசு உடனடி மற்றும் வெளிப்படையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்" என்று அவர் தெரிவித்துள்ளார்.மேலும், சொல்லிசைக் கலைஞர் கணேஸ்குமார் சங்கீத்சன் கைது செய்யப்பட்டிருப்பதற்கும், எழுத்தாளர் தீபச்செல்வன் பிரதீபனின்5 புத்தகங்களைப் பறிமுதல் செய்தற்கும் தி.வேல்முருகன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

# ஆடம்பர வாழ்க்கை குறித்து வீடியோ வெளியிட்ட பெண் யூடியூபர் வீட்டில் ரூ.10 லட்சம் திருட்டு



போபால், ஜூன்.10-
மத்திய பிரதேசத்தைச் சேர்ந்தவர் ரச்சனா குர்ஜார். பிரபல யூடியூபரான இவர், ஹோம்டூர் என்ற பெயரில் தனது ஆடம்பர வாழ்க்கை குறித்து அடிக்கடி வீடியோக்களை வெளியிட்டு வந்தார். வீட்டின் ஒவ்வொரு அறை, அலமாரிகளில் என்னென்ன பொருட்கள் இருக்கின்றன என்பதை தனது வீடியோக்களில் காண்பித்தார்.

இந்த வீடியோக்களை பார்த்த மர்ம நபர்கள் கடந்த சனிக்கிழமை அதிகாலை 2 மணிக்கு அவரின் வீட்டில் நுழைந்தனர். ரச்சனா மற்றும் அவரது குடும்பத்தினர் தூங்கிக் கொண்டிருந்த அறையை வெளிப்புறமாக பூட்டினர். பின்னர் ஹோம்டூர் வீடியோக்களில் பார்த்த காட்சிகளின் அடிப்படையில் வீட்டில் இருந்த நகைகள், பணம், விலை உயர்ந்த பொருட்களை திருடர்கள் கொள்ளை அடித்து தப்பிச் சென்றனர். அதிகாலை 4 மணிக்கு கண் விழித்த ரச்சனா கதவு வெளிப்புறமாக பூட்டப்பட்டிருந்ததை அறிந்து அதிர்ச்சி அடைந்தார். செல்போன் வாயிலாக அருகில் உள்ள உறவினர்களுக்கு அவர் தகவல் தெரிவித்தார். அவர்கள் விரைந்து வந்து மீட்டனர்.

இதுகுறித்து ரச்சனா கூறும்போது, "எங்கள் வீட்டில் நுழைந்த கொள்ளையர்கள் ரூ.10 லட்சம் மதிப்பிலான தங்க, வெள்ளி நகைகள், விலை உயர்ந்த பொருட்களை திருடிச் சென்றுள்ளனர். இதுகுறித்து உள்ளூர் போலீஸில் புகார் அளித்துள்ளோம்'' என்றார்.

இதுகுறித்து போலீஸார் கூறும்போது, "ரச்சனாவின் ஹோம் டூர் வீடியோக்களை பார்த்த திருடர்கள் நன்கு திட்டமிட்டு திருட்டை அரங்கேற்றி உள்ளனர். இதுபோன்ற வீடியோ வெளியிடுவதை தவிர்ப்பது நல்லது'' என்றனர்.

# 100% மின்மயமாக்கலை நெருங்கும் இந்திய ரயில்வே இன்னும் 269 கி.மீ. மட்டுமே நிலுவை

புதுடெல்லி, ஜூன்.10-
இந்திய ரயில்வே அகல ரயில் பாதைகளை முழுமையாக மின்மயமாக்க இலக்கு நிர்ணயித்துள்ளது. இந்நிலையில், நாட்டின் அகல ரயில் பாதையில் 99.6% ஏற்கெனவே மின்மயமாக்கப்பட்டு விட்டதாக ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மொத்தமுள்ள 70,271 கி.மீ. அகல ரயில் பாதையில் 2026 மே 31ம் தேதி நிலவரப்படி 70,002 கி.மீ. மின்மயமாக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் ரயில் பாதை மின்மயமாக்கல் கடந்த 1925ல் தொடங்கியது. நாட்டின் முதல் மின்சார ரயில் 1,500 வோல்ட் டிசி அமைப்பில், மகாராஷ்டிராவின் மும்பை விக்டோரியா டெர்மினஸ் மற்றும் குர்லா ஹார்பர் இடையே இயக்கப்பட்டது.

ரயில்வே அமைச்சகத்தின் சமீபத்திய தகவலின்படி, 25 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் தங்கள் அகல ரயில்பாதையில் 100% மின்மயமாக்கலை எட்டியுள்ளன. ராஜஸ்தான், தமிழ்நாடு, அசாம், கர்நாடகா, கோவா ஆகிய 5 மாநிலங்களில் இன்னும் 269 கி.மீ. வழித்தடம் மட்டுமே மின்மயமாக்கல் பணியின் கீழ் உள்ளன. இவை தவிர, புதிய பாதைகள் மற்றும் பல வழித்தட திட்டங்கள் அனைத்தும் தற்போது மின்மயமாக்கலுடன் சேர்த்தே அனுமதி அளிக்கப்பட்டு, கட்டமைக்கப்பட்டு வருகின்றன.

# ரூ.457 கோடி சொத்துக்களை முடக்கியதை எதிர்த்து லாட்டரி மார்ட்டின் தொடர்ந்த வழக்கில் அமலாக்கத்துறைக்கு நோட்டீஸ்!!

சென்னை, ஜூன்.10-
லாட்டரி அதிபர் மார்ட்டினுக்கு சொந்தமான ரூ.457 கோடி சொத்து முடக்கத்தை எதிர்த்த வழக்கில் அமலாக்கத் துறை பதிலளிக்க சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கடந்த 2009, 2010 ஆம் ஆண்டுகளில், விதிகளை மீறி சிக்கிம் மாநில லாட்டரி விற்றதன் மூலம் 910 கோடி ரூபாய் அளவுக்கு சிக்கிம் மாநில அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியதாக, லாட்டரி அதிபர் மார்ட்டின் உள்ளிட்டோருக்கு எதிராக சிபிஐ வழக்குப்பதிவு செய்தது. கேரளா நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள இந்த வழக்கின் அடிப்படையில் அமலாக்கத் துறையும் வழக்குப்பதிவு செய்து, லாட்டரி அதிபர் மார்ட்டின் மற்றும் அவரது குடும்பத்தினர் தொடர்புடைய இடங்களில் சோதனை நடத்தியது.இந்த சோதனையின் முடிவில், லாட்டரி அதிபர் மார்ட்டினுக்கு தொடர்புடைய 457 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்களை அமலாக்கத் துறை முடக்கம் செய்தது. அந்த முடக்கத்தை ஏற்கனவே அமலாக்கத் துறை மேல்முறையீட்டு தீர்ப்பாயம் உறுதி செய்தது. இந்த உத்தரவை எதிர்த்து, மார்ட்டின் மற்றும் சுமார் 30க்கும் மேற்பட்ட அவர் நிறுவனங்கள் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுக்களில், சொத்துக்களை முடக்கம் செய்த உத்தரவை ரத்து செய்து, சொத்துக்களை விடுவிக்க உத்தரவிட வேண்டும் என கோரப்பட்டிருந்தது. இந்த வழக்குகளை விசாரித்த தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வு, மனுவுக்கு ஆறு வாரங்களில் பதிலளிக்கும்படி, அமலாக்கத் துறைக்கு தற்போது உத்தரவிட்டு, விசாரணையை தள்ளி வைக்கப்பட்டது

# தவெக ஆட்சி கவிழும் என ஸ்டாலின் கூறியிருக்க கூடாது: மு.வீரபாண்டியன் கருத்து



ஓசூர், ஜூன்.10-
தவெக ஆட்சி கவிழும் என ஸ்டாலின் கூறியிருக்கக் கூடாது என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் வீரபாண்டியன் கருத்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே கெலமங்கலத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அவர் பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தற்போது திமுக கூட்டணியில் நாங்கள் அங்கம் வைத்துள்ளோம்.நாளை உள்ளாட்சித் தேர்தல், சட்டப்பேரவை, மக்களவைத் தேர்தல் வரும்போது, கூட்டணியில் தொடர்வது குறித்து கம்யூனிஸ்ட் கட்சிகள் கூடி முடிவு எடுப்போம். திமுக கூட்டணி கட்சியினர் தற்போது தவெகவில் அமைச்சராக உள்ளனர். இதனால் தற்போது கூட்டணி இல்லாத நிலை உள்ளது.தவெக ஆட்சி கவிழும் என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கூறியிருக்கக் கூடாது. திமுக கூட்டணியில் நாங்கள் இருப்பது குறித்து கட்சியின் நிர்வாகக் குழு கூட்டத்துக்குப் பிறகு முறையான அறிவிப்பை விரைவில் வெளியிடுவோம். தேசிய நலன் கருதி இண்டியா கூட்டணியில் திமுக இருக்க வேண்டும்

# 10, +2 பாஸ்/பெயில் மாணவர்களுக்கு முற்றிலும் இலவச கோர்ஸ்கள் "திருப்பூரில் எல்.ஜி பாராமெடிக்கல் நிறுவனத்தில் அட்மிஷன் துவக்கம்!




திருப்பூர், ஜூன்.10-
இன்றைய காலகட்டத்தில் தனியார் கல்வி நிறுவனங்களில் பல்லாயிரக்கணக்கில் பணம் கொட்டித் தீர்த்தாலும் வேலைவாய்ப்பிற்கு உத்தரவாதம் இல்லாத சூழலில், திருப்பூரில் பத்தாம் மற்றும் பன்னிரண்டாம் வகுப்பில் பின்தங்கிய ஏழை எளிய மாணவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு 100% வேலைவாய்ப்புடன் முற்றிலும் 'இலவசமாக' மருத்துவத் துணைக் கல்வியை ஸ்ரீ எல்.ஜி பாராமெடிக்கல் நிறுவனம் வழங்குவது மிகவும் போற்றத்தக்க உன்னத சேவையாகும். ஏழைப் பிள்ளைகளின் கல்வித் தாகத்தைத் தீர்க்கும் இந்த முயற்சி பாராட்டுக்குரியது. வியாபாரமாகிப் போன கல்விச் சந்தையில், அன்னை தெரசா மற்றும் அப்துல் கலாம் ஆகியோரின் கொள்கை வழியில் நற்பணியாகத் தொடரும் இந்த உன்னத முயற்சி மென்மேலும் சிறந்து விளங்க வேண்டும். திருப்பூர் நல்லூர், காங்கேயம் ரோட்டில் அமைந்துள்ள மத்திய அரசின் NCVTC அங்கீகாரம் பெற்ற 'ஸ்ரீ எல்.ஜி பாராமெடிக்கல் மற்றும் கல்வி நிறுவனத்தில்' (Sree LG Paramedical and Education Institute) நடப்பு 2026 ஆம் கல்வி ஆண்டிற்கான பல்வேறு மருத்துவத் துணைப் படிப்புகளுக்கான (Paramedical Courses) மாணவர் சேர்க்கை கடந்த மே 18ஆம் தேதி முதல் விறுவிறுப்பாகத் தொடங்கி நடைபெற்று வருகிறது.இக்கல்வி நிறுவனத்தில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மற்றும் தவறிய மாணவ மாணவிகளுக்காக முற்றிலும் இலவசமாகபல்வேறு டிப்ளோமா படிப்புகள் வழங்கப்படுகின்றன.

குறிப்பாக, டிப்ளோமா இன் நர்சிங் அசிஸ்டெண்ட் (DNA) / பேஷண்ட் கேர், டிப்ளோமா இன் மெடிக்கல் லேப் டெக்னாலஜி (DMLT), டிப்ளோமா இன் ஆபரேஷன் தியேட்டர் டெக்னாலஜி (DOTT), டிப்ளோமா இன் சிஜி / MRI ஸ்கேன் மற்றும் X-Ray டெக்னாலஜி, டிப்ளோமா இன் ஐ.சி.யு (ICU) டெக்னாலஜி மற்றும் மெடிக்கல் அசிஸ்டெண்ட் போன்ற மருத்துவத் துறையில் அதிகத் தேவையுள்ள 2லு ஆண்டுகள் கால அளவு கொண்ட தொழிற்படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. இத்துறையில் பயிலும் மாணவர்களுக்குப் படிப்பு முடிந்தவுடன் 100% வேலைவாய்ப்பு (100%) உறுதி செய்யப்படுகிறது. இந்த அரிய இலவச கல்வி வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பும் தகுதியான மாணவ மாணவிகள் மற்றும் பெற்றோர்கள், சேர்க்கை விபரங்களுக்கு லதா மகேஸ்வரி அவர்களை *98430 80692* மற்றும் *98437 10692* ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு தங்களது சேர்க்கையை உறுதி செய்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தென்காசி தெற்கு மாவட்ட திமுக மகளிர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்

தென்காசி, ஜூன்.10-
தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் சுரண்டை கலைஞர் நினைவாலயத்தில் நடைபெற்றது.தென்காசி தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் வே. ஜெயபாலன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், வருகின்ற 13.06.2026 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெறவுள்ள தி.மு.க. மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி கூட்டம் தொடர்பாக விரிவான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், மகளிர் அணியின் செயல்பாடுகளை வலுப்படுத்துதல், கழகப் பணிகளை மக்களிடம் கொண்டு சேர்த்தல் மற்றும் கூட்டத்தில் அதிகளவில் பங்கேற்பதை உறுதி செய்வது குறித்து கருத்துகள் பரிமாறப் பட்டன.இக்கூட்டத்தில் மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டு தங்களது கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கினர்.

# “புதுச்சேரி கடலோர கிராமங்களில் படகுகள் ஆய்வு!” களமிறங்கிய 15 சிறப்புப் படைக் குழுக்கள்!

புதுச்சேரி, ஜூன்.10-
மத்திய அரசின் மீன்வள அமைச்சகத்தின் உத்தரவின்படி, புதுச்சேரியில் உள்ள அனைத்துக் கடலோர மீனவ கிராமங்களிலும் மீன்பிடிப் படகுகளைக் கள ஆய்வு செய்து கணக்கெடுக்கும் பணி ஒரே நாளில் மிக விமரிசையாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.
புதுச்சேரி அரசு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை (தேங்காய்த்திட்டு மீன்பிடி துறைமுக வளாகம்) வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பின்படி, அனைத்துக் கடலோரப் பகுதி மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் தற்பொழுது நடைமுறையிலுள்ள 2026 ஆம் ஆண்டுக்கான மீன்பிடித் தடைக் காலத்திற்குள், அனைத்து மீன்பிடிப் படகுகளையும் கள ஆய்வு செய்து இணையதளப் பக்கத்தைப் புதுப்பித்து அறிக்கை அனுப்ப மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, புதுச்சேரியில் உள்ள இயந்திரம் பொருத்தப்பட்ட ஃபைபர் படகுகள் மற்றும் இயந்திரம் இல்லாத ஃபைபர் கட்டுமரங்களைக் கள ஆய்வு செய்ய மீன்வளத்துறை அதிகாரிகள் அடங்கிய 15 குழுக்கள் அமைக்கப்பட்டன.



இப்பணிக்கான விளக்கக் கூட்டம் கடந்த ஜூன் 5ஆம் தேதி மீனவ கிராம பஞ்சாயத்து மற்றும் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளுடன் நடைபெற்றது. ஒரே நாளில் திட்டமிட்டபடி 15 மீனவ கிராமங்களிலும் கணக்கெடுப்புப் பணி நடைபெற்றது. இப்பணியை மீன்வளத்துறையின் இயக்குநர் முகமது இஸ்மாயில், இணை இயக்குநர் தெய்வசிகாமணி ஆகியோர் தலைமையில், துணை இயக்குநர்கள் கவியரசன், சாஜிமா மற்றும் ராஜேந்திரன் ஆகியோர் மேற்பார்வையிட்டனர். மீனவ கிராம பஞ்சாயத்தார்கள் மற்றும் படகு உரிமையாளர்கள் சங்கங்களின் முழு ஒத்துழைப்புடன் இக்கணக்கெடுப்பு வெற்றிகரமாக நிறைவடைந்தது. இம்மாபெரும் பணியை மீன்வளத்துறையின் துணை இயக்குநர் (இயந்திரப்பிரிவு) முனைவர் திரு. கோவிந்தசாமி அவர்கள் சிறப்பான முறையில் ஒருங்கிணைத்தார்.



# “தென்காசியில் விஸ்வரூபம் வர்த்தகக் கண்காட்சி!” அமைச்சர் மதன்ராஜா தலைமையில் 2ஆம் நாள் நிகழ்வு!

தென்காசி, ஜூன்.10-
தென்காசி மாவட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் சங்கம் சார்பில் மூன்று நாட்கள் நடைபெறும் பிரம்மாண்ட வர்த்தகக் கண்காட்சியின் இரண்டாம் நாள் நிகழ்வு, அமைச்சர் மதன்ராஜா தலைமையில் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. தென்காசியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்று வரும் இந்த வர்த்தகக் கண்காட்சியினை, தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்ஜீத் சிங் இ.ஆ.ப. தலைமையில், திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ் முன்னிலையில், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் மதன்ராஜா அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.கண்காட்சியின் 2ஆம் நாள் நிகழ்வாக, பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்கள் சார்பில் காட்சிப்படுத் தப்பட்டிருந்த அதிநவீன தொழில்நுட்பங்களை அமைச்சர் பார்வையிட்டதுடன், அதன் செயல் திட்டங்கள் மற்றும் பொருளாதாரப் பலன்கள் குறித்தும் கேட்டறிந்தார். தொடர்ந்து, தொழில் துறையில் சிறந்து விளங்கும் முன்னோடிகளைப் பாராட்டி, அவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் களையும் கேடயங்களையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட தொழில் மைய மேலாளர் மாரியம்மாள், தென்காசி மாவட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் சங்கத் தலைவர் அன்பழகன், முக்கியப் பிரமுகர்கள் ராஜபிரகாஷ், நியாஸ், மாரியப்பன் மற்றும் அரசு அதிகாரிகள், சங்க உறுப்பினர்கள், தொழில் அதிபர்கள் எனப் பலரும் திரளாகக் கலந்துகொண்டனர்.



# பக்தர் வெள்ளத்தில் ஜெய்ஹிந்த்புரம் ஸ்ரீ வீரமாகாளியம்மன் கோவில் 74வது ஆண்டு திருவிழா கோலாகலம்!

மதுரை, ஜூன்.10-
மதுரை ஜெய்ஹிந்த்புரத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளியம்மன் திருக்கோவிலின் 74வது ஆண்டு (பசலி 1435) உற்சவத் திருவிழா கடந்த மே 15ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி, தற்பொழுது மிக விமரிசையாக நடைபெற்று வருகிறது.விழாவின் முக்கிய நிகழ்வாக, கடந்த ஜூன் 5ஆம் தேதி பால்குடம், அலகு குத்துதல் மற்றும் பறவைக் காவடி எடுத்து வரப்பட்டு அம்மனுக்குச் சிறப்பு அபிஷேகங்களும், அன்னதானமும் நடைபெற்றன. இரவு சக்தி கிரகத்துடன் அம்மன் பூப் பல்லாக்கில் திருவீதி உலா வந்தார். தொடர்ந்து ஜூன் 6 மற்றும் 7 ஆகிய தேதிகளில் ஊர்ப் பொங்கல் வைக்கப்பட்டு, சுமார் 500க்கும் மேற்பட்ட பக்தர்கள் அக்னிச்சட்டி எடுத்தும், முளைப்பாரி சுமந்தும் தங்களது நேர்த்திக்கடனைச் செலுத்தினர். மகா திருவிளக்கு பூஜையில் 500க்கும் மேற்பட்ட பெண் பக்தர்கள் கலந்துகொண்டு அம்மனை வழிபட்டனர். இத்திருவிழா அனைத்தும் கோவில் தக்கார் சீ.சுசிலாராணி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை திருக்கோவில் செயல் அலுவலர் இரா. முத்துகிருஷ்ணன் ஆகியோரின் நேரடிப் பார்வையில் மிகச் சிறப்பான முறையில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. மஞ்சள் நீராட்டு விழாவும், அதனைத் தொடர்ந்து திருக்கோவில் சார்பாகப் பொதுமக்களுக்குக் கூழ் வழங்கும் நிகழ்வும் நடைபெற உள்ளது. இத்திருவிழாவின் நிறைவுப் பகுதியாக வரும் ஜூன் 12ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) இரவு 12 மணிக்கு ஸ்ரீ வீரமாகாளியம்மனுக்கு மகா மறுபூஜை நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.



# *தேர்வில் சாதனை படைத்த மாணவமாணவிகள்!” செங்கோட்டை தவெக சார்பில் பாராட்டு விழா!

செங்கோட்டை, ஜூன்.10-
தென்காசி மாவட்டம் செங்கோட்டை அருகே வல்லத்தில் அமைந்துள்ள அன்னை தெரசா ஆர்.சி. மேல்நிலைப்பள்ளியில், அரசு பொதுத்தேர்வில் சிறப்பிடம் பெற்ற மாணவமாணவிகளுக்குத் தமிழக வெற்றிக்கழகத்தின் செங்கோட்டை கிழக்கு ஒன்றியத்தின் சார்பில் பிரம்மாண்ட பாராட்டு விழா நடத்தப்பட்டுள்ளது. கடந்த 202526 ஆம் கல்வியாண்டில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவர்களைக் கௌரவிக்க, தவெக தென்காசி மேற்கு மாவட்ட செயலாளர் எம். நியாஸ் ழிஜிடீஸி ஆலோசனையின் பேரில் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. பள்ளியின் தாளாளர் அருட்பணி ஜோ.விசுவாச ஆரோக்கியராஜ் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தலைமை ஆசிரியர் A.ஆரோக்கியராஜ் அனைவரையும் வரவேற்றார்.
விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட செங்கோட்டை கிழக்கு ஒன்றிய செயலாளர் ட. பரமசிவன், 12ஆம் வகுப்பில் சாதனை படைத்த ஜெயா (559/600), மல்லிகா (525/600), பரத்ராஜ் (505/600) மற்றும் 10ஆம் வகுப்பில் சிறப்பிடம் பெற்ற மணிகண்டன் (487/500), அபிநயா (480/500), வைஷ்ணவி (478/500), அறிவியலில் 100க்கு 100 மதிப்பெண் பெற்ற கீர்த்தனா ஆகியோருக்குப் பொன்னாடை அணிவித்து, நினைவுப் பரிசு மற்றும் கல்வி ஊக்கத்தொகை வழங்கி வாழ்த்தினார். இந்நிகழ்வில் தவெக நிர்வாகிகள் டேவிட் சுரேஷ், ஷார்ப் ராஜா, ஜில்லா மணி, மகளிர் அணியினர் மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு பங்கேற்றனர். நிறைவாக, உதவி தலைமை ஆசிரியை கி. செல்வகுமாரி நன்றி கூறினார்.



■ தென்காசி ஸ்ரீ காசி விஸ்வநாதர் திருக்கோயில் நுழைவாயில் பகுதியில் மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சரும் (தென்காசி மாவட்ட பொறுப்பு அமைச்சர்) வி.கே. ராஜுவ் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் பொதுமக்களுக்கு மரக்கன்றுகளை வழங்கினார்.உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்ஜீத் சிங்.இ.ஆ.ப. மாவட்ட வருவாய் அலுவலர் . ஜெயச்சந்திரன் ஆகியோர் உள்ளனர்.

# *100க்கும் மேற்பட்ட திருமணங்கள்... வைகாசி கடைசி முகூர்த்த நாளில் ஸ்தம்பித்த திருப்பரங்குன்றம்!

மதுரை, ஜூன்.10-
மதுரை திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயிலில் வைகாசி மாதத்தின் கடைசி முகூர்த்த நாள் மற்றும் வாராந்திர விடுமுறை தினத்தை முன்னிட்டு, ஒரே நாளில் நூற்றுக்கணக்கான திருமணங்கள் நடைபெற்றதால் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கோயிலில் திரண்டனர். முருகப்பெருமானின் முதற்படை வீடான திருப்பரங்குன்றத்தில், வைகாசி மாதத்தின் கடைசி சுபமுகூர்த்த நிகழ்வுகள் அலைமோதின. இக்கோயிலில் மட்டும் அதிகாரப்பூர்வமாகப் பதிவு செய்யப்பட்டு 37 திருமணங்கள் நடைபெற்றன. இது தவிர, கோயிலைச் சுற்றியுள்ள



தனியார் திருமண மண்டபங்களில் பதிவு செய்யப்படாமல் 100க்கும் மேற்பட்ட திருமணங்கள் விமரிசையாக நடத்தப்பட்டன. ஒரே நாளில் நூற்றுக்கணக்கான புதிய ஜோடிகள் இத்தலத்து முருகனை வழிபட்டுத் தங்களது வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்கினர்.
மேலும், வைகாசி மாதம் முடிவதால், முருகனுக்குப் பால்குட நேர்த்திக்கடன் செலுத்த வேண்டிய ஏராளமான பக்தர்கள் பால்குடம் எடுத்து வந்து முருகப்பெருமானுக்குப் பாலபிஷேகம் செய்து தங்களது நேர்த்திக்கடனைச் செலுத்தினர்.வாராந்திர விடுமுறை தினம் என்பதால், வழக்கத்தை விடப் பொதுமக்களின் வருகை அதிகமாக இருந்து, கோயில் வளாகம் முழுவதும் பக்தர்கள் கூட்டத்தால் அலைமோதியது.



# சென்னை வியசார்பாடியில் மின்வெட்டு காரணமாக தனியார் பள்ளிக்கு விடுமுறை

சென்னை, ஜூன்.10-
வியாசர்பாடியில் மின்வெட்டு காரணமாக தனியார் பள்ளிக்கு விடுமுறை அறிவித்துள்ளது. எருக்கஞ்சேரி அருகே நள்ளிரவு மின்மாற்றி வெடித்து சிதறியதால் மின்விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. நள்ளிரவு முதல் மின்சாரம் தடைபட்டுள்ளதால் பொதுமக்கள், பள்ளி செல்லும் மாணவர்கள் கடும் அவதி அடைந்துள்ளனர்



■ திருப்பூர் மாநகராட்சி ஆணையர் எம்.பி. அமித் இ.ஆ.ப. மண்டலம் 3க்கு உட்பட்ட வார்டு 59, அமராவதி நகர் பகுதியில் வீடுகளுக்குக் குடிநீர் இணைப்பு வழங்கும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின் போது, உதவி செயற்பொறியாளர் சுப்பிரமணி, [illegible]



■ மதுரை மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ், கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம் வஞ்சிநகரம் கிராமத்தில் சிப்காட் தொழில்பேட்டை அமையவுள்ள இடத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். உதவி ஆட்சியர் (பயிற்சி) சித்தார்த் போகாணி உடன் உள்ளார்.




SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000